
# தென் ஜிஞ்சாங் மக்களின் வீடு - கடை பிரச்சினை புதிய மேயர் மைமுனா தலையிட்டு தீர்ப்பாரா?

## குடியிருப்போர் சங்கம் கேள்வி

**கோலாலம்பூர், ஆக. 22-**
**இங்கு ஜிஞ்சாங் செலாத்தான் தம்பாஹானில் உள்ள 560 வீடு மற்றும் கடை உரிமையாளர்கள் கோலாலம்பூரின் புதிய மேயரை சந்திக்கவிருப்பதாக தெரிவித்தனர்.**



தங்கள் வட்டாரத்தில் ஒரு வீடமைப்புத் திட்டம் வரவிருப்பதை அடுத்து அந்த வட்டாரத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் தங்களுக்குரிய இழப்பீட்டைத் தர வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு அந்தத் திட்டம் தொடங்கப் பட்டது. ஆனால் இது தொடர்பில் தாங்கள் இழப்பீடு பெறலாம் என்பதை பலர் அறியாமல் இருக்கிறார்கள் என்று அந்த குடியிருப்பு வட்டார நிர்வாகக் குழுவின் செயலாளர் அமிர்கான் பரக்கத் அலி கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் இந்த இழப்பீடு பற்றி பேசவே மறுக்கிறது. மேலும் இந்த இழப்பீடு பெற தகுதியானவர்கள் யார் என்பதும் உறுதி செய்யப் படவில்லை. சிலருக்கு மட்டுமே இந்த உண்மை புரிகிறது. மற்றவர்கள் அறியாமையில் இருக்கிறார்கள் என்றார் அவர்.

அங்கிருக்கும் வீடுகளை உடைத்து மாற்று வீடுகளை தர வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுவரை 80% மாற்று வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2ஆவது கட்ட குடும்பங்களுக் கான இன்னும் ஆரம்பிக்கப்பட வில்லை என்று அவர் சொன்னார்.

நேற்று கோலாலம்பூர் மேயர் மைமுனா ஷரிஃபின் அலுவலகத்தில் தங்கள் கோரிக்கை மனு ஒன்றை சமர்பித்த பின்னர் அவர் பேசினார். புதிய மேயர் அங்குள்ள குடும்பங்களின் கோரிக்கையை ஆராய வேண்டும்.

ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள் அந்த இடத்தை நாங்கள் காலி செய்ய வேண்டும் என்று மாநகர் மன்றம் நோட்டீஸ் கொடுத்தது. ஆனால் அது உடனடியாக ரத்தும் செய்யப்பட்டது.

அதேபோல புதிய வீடுகளுக்கான குலுக்கள் நிகழ்ச்சியையும் உடனடியாக ஒத்தி வைக்க வேண்டும். பலருக்கு தெரியாமல் அதிலும் குடியிருப்பு சங்கத்திற்கு தெரியாமல் இது நடக்கிறது என்றார் அவர். தங்களுக்கு தரப்பட வேண்டிய இழப்பீடு பற்றிய முழு விவரங்கள் ஒரு பட்டியலாக தரப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

தென் ஜிஞ்சாங் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை அவர் தீர்ப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். இல்லாவிட்டால் அமைச்சர் ஸஷேஹா முஸ்தபாவை சந்திக்கவிருக்கிறோம். இந்த வீடமைப்புத் திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜூன் 29-30 மற்றும் ஜூலை 13-14 ஆகிய தேதிகளில் 237 குடும்பங்களுக்கான குலுக்கள் நடைபெற்றது என்றார் அவர்.